10.05.2024
STC. 783/2024
புகார்தாரர் – ராஜா, த/பெ. சுப்பிரமணி

புகார்தாரர் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்துவைக்கப்பட்டார்.

எதிரி வாணிசரஸ்வதியும், மனுதாரராகிய நானும் நண்பர்கள் அவர் தனக்கு நன்கு அறிமுகமானவர் என்ற அடிப்படையில், எதிரி தனது குடும்ப சில்லரை கடன்களை அடைப்பதற்கும், கடந்த 19.11.2023 ம் தேதி மனுதாரர் வீட்டில் வைத்து ரூ. 3,00,000/– கடனாக கேட்டதாகவும் மனுதாரர் 22.11.2023 ம் தேதி தனது வீட்டில்வைத்து கடனாக ரூ. 3,00,000/ கொடுத்தாகவும் பணத்தைபெற்றுக்கொண்டு எதிரி 2 மாத காலத்தில் திருப்பி தருவதாக சொல்லி அன்றைய தினமே மேற்படி கடனை தீர்க்கும்பொருட்டு எதிரி தான் கணக்குவைத்துள்ள திண்டுக்கல் M/S City Plaza B. No. 11 மெயின் ரோட்டில் உள்ள IDBI வங்கி காசோலை ( காசோலை எண். 335060) ஒன்றை 23.01.2024 என பின் தேதியிட்டு தொகையை நிரப்பி பூர்த்தி செய்து கையெழுத்து செய்து முறையீடுதாரரின் பெயரிட்டு கொடுத்தாகவும் எதிரி பணத்தை திருப்பி செலுத்தாத நிலையில் எதிரியிடம் பணத்தை திருப்பி கேட்டபோது , தனது வங்கி கணக்கில் பணம் இருப்பதாகவும் தான் கொடுத்த காசோலையை வசூலுக்கு செலுத்தி பெற்றுக்கொள்ளுமாறு கூறியதாகவும் மனுதாரர் எதிரி கொடுத்த காசோலையை தான் கணக்குவைத்துள்ள திண்டுக்கல் R.M. Colony ICICI வங்கி கிளையில் 23.01.2024 ம் தேதி வசூலுக்கு செலுத்திய போது , தாவா காசோலை Funds Insufficient என்ற குறிப்புடன் 30.01.2024 ம் தேதி மதிப்பு மறுக்கப்பட்டு திருப்பட்டு விட்டதாகவும் புகார்தாரர் எதிரிக்கு காசோலை திருப்பட்ட விவரத்தை கூறி தனது வழக்கறிஞர் மூலம் கடந்த 06.02.2024 ம் தேதி அறிவிப்பு அனுப்பியதாகவும் , அந்த அறிவிப்பினை பெற்றுக்கொண்ட எதிரி 12.03.2024 ம் தேதி கையெழுத்தை மட்டும் ஒப்புக்கொண்டு பொய்யான காரணங்களைக்கூறி பதில் அறிவிப்பு அனுப்பியதாகவும் மேலும் பணத்தை திருப்பித்தரவில்லை என்றும் எனவே எதிரி அவரது வங்கி கணக்கில் போதிய பணம் இல்லை என்பதை தெரிந்துகொண்டே காசோலையை கொடுத்து மோசடி செய்து என்னை ஏமாற்றியுள்ளார். மேற்படி எதிரி மீது நடவடிக்கை எடுத்து காசோலைக்கான தொகை பெற்றுத்தருமாறு பிரார்த்தித்துக் கொள்கிறேன்.

taken down by me in open court read over to the Witness in the presence of the accused interpreted to him Tamil and admitted by him to be correct.

V PRIYA

Digitally signed by V PRIYA
Date: 2024.05.23 17:52:18 +0530

Judicial Magistrate No.I
Dindigul.

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.I, DINDIGUL**

| | | |
|---|---|---|
| Case No. | : | S.T.C. 783 /2024 |
| Deposition of witness for | : | PW : 1<br>DW : |
| Name | : | ராஜா |
| Father Name | : | சுப்பிரமணியன் |
| Village | : | திண்டுக்கல் |
| Taluk | : | திண்டுக்கல் |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | /2024 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 10.05. 2024

நான் இவ்வழக்கின் புகார்தாரர். எதிரியின் மீது காசோலை மோசடி குறித்த வழக்கு தாக்கல் செய்துள்ளேன். புகார்தாரர் தரப்பில் 1 வது சாட்சியாக சாட்சியம் அளிக்க எனது முதல் விசாரணை வாக்குமூலத்தினை தாக்கல் செய்கிறேன்.

1) 23.01.2024 –ம் தேதியிட்ட மனுதாரருக்கு, எதிரி கொடுத்த , திண்டுக்கல் M/S City Plaza B. No. 11 மெயின் ரோட்டில் உள்ள IDBI வங்கியின் காசோலை (காசோலை எண். 335060) அசல் ம.த.சா.ஆ.1 ஆகும்.

2) 23.01.2024–ம் தேதியிட்ட மனுதாரருக்கு, எதிர்மனுதாரர் கொடுத்த காசோலையை திண்டுக்கல் R.M. Colony , ICICI வங்கி கிளையில் வசூலுக்கு தாக்கல் செய்த செலான் அசல் ம.த.சா.ஆ.2 ஆகும்.

3) 30.01.2024 –ம் தேதியிட்ட மனுதாரருக்கு அவரது வங்கியால் போதிய பணம் இல்லையென காசோலை திருப்பப்பட்டதற்கான ரிட்டன் மெமோ அசல் ம.த.சா.ஆ.3 ஆகும்.

4) 06.02.2024 – ம் தேதியிட்ட மனுதாரர், எதிரிக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு அலுவலக நகல் ம.த.சா.ஆ.4 ஆகும்.

5) 06.02.2024 – ம் தேதியிட்ட மனுதாரர், எதிரிக்கு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பியதற்கான அஞ்சலக ரசீது அசல் ம.த.சா.ஆ.5 ஆகும்.

6) மனுதாரரின் வழக்கறிஞர் அறிவிப்பை எதிர்மனுதாரர் பெற்றுக் கொண்டதற்கான Track consignment நகல் ம.த.சா.ஆ.6 ஆகும்.

7) வங்கி ஸ்டேட்மெண்ட் நகல் ம.த.சா.ஆ.7 ஆகும்.

8) 12.03.2024 – ம் தேதி எதிரி அனுப்பிய பதில் அறிவிப்பு அசல் ம.த.சா.ஆ.8 ஆகும்.

9) 13.03.2024 – ம் தேதி தலைமை தபால் அதிகாரிக்கு பதிவுத்தபால் மூலம் அனுப்பிய புகார் மனு நகல் ம.த.சா.ஆ.9 ஆகும்.

10) 13.03.2024 – ம் தேதி தலைமை தபால் அதிகாரிக்கு பதிவுத்தபால் மூலம் அனுப்பிய புகார் மனுக்கான ரசீது அசல் ம.த.சா.ஆ.10 ஆகும்.

11. 14.03.2024– ம் தேதி எதிரி புகாரை பெற்றுக்கொண்டதற்கான அஞ்சலக ஒப்புகை அட்டை அசல் ம.த.சா.ஆ.11 ஆகும்.

12. புகாரை பெற்றுக்கொண்டதற்கான Tract complaint status கணனி நகல் ம.த.சா.ஆ.12 ஆகும்.

எனவே மனு படி தீர்ப்பளிக்க வேண்டுகிறேன்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜராகி குறுக்கு விசாரணை இல்லை என தெரிவித்தார்.

taken down by me in open court read over to the Witness in the presence of the accused interpreted to him Tamil and admitted by him to be correct.

V PRIYA

Digitally signed by V PRIYA
Date: 2024.05.23 17:52:25 +0530

Judicial Magistrate No.I
Dindigul.